வழங்கப்படும் என அறிவித்தது. ஆனால், அப்பகுதியில் வாழும் ஏழைகளால் அத்தொகையைத் திரும்ப செலுத்தி பட்டா பெற முடியவில்லை. மேலும், அப்பகுதி மக்கள் கட்ட வேண்டிய கடன் மற்றும் அதற்கான வட்டி பெருமளவில் பெருகிவிட்டது. அவர்கள் வசிக்கும் இடத்தின் விலையைவிட கடன் தொகை பன்மடங்கு பெருகிவிட்டது. அதனால் அவர்களால் கடன் தொகையைச் செலுத்த முடியவில்லை. மேற்கண்ட குடிசை மாற்று வாரியத்தின் பகுதியில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மக்கள் செலுத்த வேண்டிய கடன் பாக்கியினை அரசே ஏற்று, அவற்றை இரத்து செய்து, ஏழை மக்களுக்கு இலவச பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

வீரபாண்டி ஒன்றியத்திற்குட்பட்ட காக்காப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைத்து பள்ளிக் குழந்தைகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பினை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேம்படிதாளம் பகுதியில் உள்ள இரயில்வே மேம்பாலத்தினை அமைத்துத் தந்து மக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றித்தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரட்டை இலையைத் தமிழகத்தில் ஓர் அலையாக எழவைத்து, நிலையான ஆட்சியை நிறுவச் செய்து, தமிழர்களின் இல்லங்களையும், உள்ளங்களையும் வாழ்வித்துக் கொண்டிருக்கும் அரசியலின் வானம்பாடி, எங்கள் அன்னையின் திருவடியைப் பணிந்து வணங்கி, மாண்புமிகு தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைக்கு நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, கீழ்க்கண்டவாறு

சட்டமன்றப் பேரவை அலுவல்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

6–7–2019 சனிக்கிழமை அரசு விடுமுறை, 7–7–2019 ஞாயிற்றுக்கிழமை அரசு விடுமுறை.

8–7–2019 அன்று முற்பகல். மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகியவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

9–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம், மானியக் கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அன்று பிற்பகல் மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) ஆகியவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

10–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பிற்பகலில், மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

11–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

12–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 18–கதர்,

2019 ஜுலை 5] [பேரவைத் தலைவர்]

கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அன்று பிற்பகல் மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

13–7–2019 சனிக்கிழமை அன்றும், 14–7–2019 ஞாயிற்றுக்கிழமை அன்றும் அரசு விடுமுறை.

15–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அன்று பிற்பகலில், மானியக் கோரிக்கை எண் 29 சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 47– இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

16–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அன்று பிற்பகலில் மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

17–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையும், மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பும், அன்று பிற்பகல் மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

18–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), மானியக் கோரிக்கை எண்

30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) துறையும், அன்று பிற்பகல் மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

19–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

20–7–2019 அன்று முற்பகல் மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை, மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம், மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை, மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பிற்பகல் 2–15

பிற்பகலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். ஏனைய அரசு அலுவல்கள் இருந்தால், அதுவும் எடுத்துக்கொள்ளப்படும். பேரவை, முற்பகலில் 10–00 மணிக்குக் கூடி, சரியாக 2–00 மணிக்கு நிறைவு பெறும். மீண்டும் பேரவை பிற்பகலில் 4–00 மணிக்கு கூடி அவை அலுவல்கள் முடிகிறவரை கூட்டம் நடைபெறும்.

இதிலே பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள், உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற, கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்திற்குள்ளாக பேசி இந்த நிகழ்ச்சிநிரலின்படி சட்டமன்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எக்காரணத்தை முன்னிட்டும், நான் மணியடித்ததற்கு பின்னால், பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. அப்படி பேசினால் இந்த நிகழ்ச்சிநிரலை நாம் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். தொடர்ந்து நாம் தள்ளி வைக்க வேண்டிய

2019 ஜுலை 5] [பேரவைத் தலைவர்]

சூழ்நிலை வரும். எக்காரணத்தைக் கொண்டும் அறிவித்த நிகழ்ச்சி மாற்றப்பட மாட்டாது. கூடுதல் நேரமும் ஒதுக்கப்பட மாட்டாது. பேசுகிற உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்புத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(இ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஈ) கோரிக்கை எண் 8 –பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

—*தொடர்ச்சி*

—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பால் வளத் துறை மானியங்கள் மீது நடைபெறும் விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில், நீரோடித்துறை, மார்த்தாண்டந்துறை, வள்ளவிளை ஆகிய 3 கிராமங்களுக்கு 116 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்னாள் முதல்வர், எம்.ஜி.ஆர். அவர்களின்*